வாய்க்காலிலே ஹெல்ட் அப் ஆகி தண்ணீர் பாயும். இதைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரிக்க வழி வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, காவேரி டெல்டா சீரமைப்புத் திட்டம் என்பதே அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதுதான். வருகின்ற தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி தேவைப்பட்ட இடத்திற்கு மிக வேகமாகத் தண்ணீரைக் கொடுப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பு. அவர் சொல்வதைப்போல காவேரி பகுதி பூரா செய்ய வேண்டுமென்று சொன்னால் அதிகச் செலவு ஆகும். ஆகவே தான் உலக வங்கி உதவியோடு அப்படிப்பட்ட முயற்சிகளை இன்றைக்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம்.

606—(*வினா எண் 13569) **திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியத்தில் கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எப்படியும் இந்தப் பணியைத் தொடங்குவதற்கு உத்தரவு வழங்குவார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த வினாவை எழுப்பினேன். ஆகையால் இந்தத் திட்டத்திற்கு முதலிலே எஸ்டிமேட், பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு இப்பொழுது அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பகுதியின் வறட்சி நிலையை அறிந்து இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்றுவதற்கு உத்தரவு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 மே 5]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும், இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் மிக வேகமாக மேற்கொள்ள வேண்டுமென்ற ஆசைதான் இருக்கிறது. ஆனால் நிதிப்பற்றாக்குறை மிகப்பெரிய சுமையாக நமக்கிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 16 கோடி ரூபாய் என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மறு ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி மறு ஆய்வு செய்து வந்தவுடனேயே முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் மிக வேகமாக எடுத்து வேலை செய்யப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் உத்தரவு கேட்டு இதைச் செய்வதாகக் கூறினார்கள். ஆனால் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வரவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை எப்படியும் செயல்படுத்துவதாக அந்தப் பகுதி மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். புரட்சித் தலைவரின் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு உடனே உத்தரவு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அவசரமாக இருக்கிறார்கள். மறு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. மறு ஆய்வின் திட்ட அறிக்கை அரசாங்கத்திற்கு வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1962, 1963, 1964 ஆம் ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்டு 123 இலட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டு, பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் அதை எடுத்து 16.5 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டி, அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதனுடைய முக்கியத்துவம் என்னவென்றால் மழைக்காலங்களில்

தண்ணீர் அதிகமாக வந்து கொடை ரோட்டிலிருந்து பள்ளப்பட்டி வரையில் உள்ள பாதைகளில் உடைப்பு எடுத்து, இரயில் கவிழக்கூடிய நிலைமை இருக்கிறது; ஆயிரக்கணக்கானவர்கள் சாகக்கூடிய நிலைமை இருக்கிறது; செத்தும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்க 1987-88 ஆம் ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவு நுட்பத்தைப் பயன்படுத்தி, திறமையைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த காலத்தில் பி.சி.ஏ.சி. ரேஷியோ மோசமாக இருந்ததால் மறு ஆய்வு செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது. மறு ஆய்வு செய்து சாதகமாக வரும்போது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேரவைக்கு (செனட்) மூன்று உறுப்பினர்களை இவ்வவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்பொருட்டு வேட்புத் தாள்கள் கோரியபோது ஐந்து உறுப்பினர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்தார்கள். எனவே இன்று தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தேன். தற்போது உறுப்பினர்கள் டாக்டர் ந. மாசிலாமணி மற்றும் திரு. சா. ஜெயச்சந்திரன் இருவரும் தாங்கள் இந்தப் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக என்னிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளபடியால் கீழ்க்கண்ட மூன்று உறுப்பினர்கள் மேற்படி